

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.4.2025) தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர், 2025–2026 ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் ஜோ.அருண், தமிழ்நாடு ஹஜ் கமிட்டி முதன்மை செயல் அலுவலர் எம்.ஏ.சித்திக், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் சி. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் (முழு கூடுதல் பொறுப்பு) டாக்டர் தரேஷ் அகமது, மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் திரு.வி. சம்பத், சிறப்பு செயலாளர் திருமதி வி.கலையரசி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் டாக்டர் எஸ்.சுரேஷ் குமார், சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் திருமதி எம். ஆசியா மரியம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்** வருகிற (03-05-2025 சனிக்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்** : கழக ஆக்கப் பணிகள்

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 600 018




